மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: முதன் முதலில் இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தென்னாற்காடு மாவட்டத்தில்தான் 1958-லிருந்து 1963-ம் ஆண்டு வரை, 140 துளைக் கிணறுகள் போடப்பட்டிருந்தன. கடலூர்–விருத்தாசலம் சாலையில் ஆலப்பாக்கத்திலிருந்து ஊமங்கலம் வரையிலும், சிதம்பரம்–விருத்தாசலம் சாலையில், சேத்தியாத் தோப்பிலிருந்து கம்மாபுரம் வரையிலும், சேத்தியாத்தோப்புக் கீழ் அணை சாலையில் சேத்தியாத் தோப்பிலிருந்து தென்னாற்காட்டின் எல்லை வரையிலும், வட திசையில் நெய்வேலி சுரங்கங்கள் வரையிலும் 140 துளைக் கிணறுகள் போடப்பட்டிருந்தன. அவை இப்பொழுது மறைந்துவிட்டதன் காரணத்தால், நான் முதலில் குறிப்பிட்டபடி, ரூ. 4·52'850 செலவழித்து, அவற்றைச் சீர்படுத்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது. எனவே, இந்தக் கிணறுகள் அதிகப்படியாகத் தேவை என்பதை உணருகிறேம். இவைகளில் ஒழுங்காகத் தண்ணீர் கிடைக்கவில்லை என்பது தென்னாற்காடு மாவட்டத்தில் கண்ட அனுபவம் ஆகும். நல்ல நீரூற்றுக்கள் இருக்கும் இடங்களாகப் பார்த்து—கட்டுப்பாடு இல்லாத இடங்களாகப் பார்த்து—தஞ்சை மாவட்டத்தில் கிணறுகள் எடுப்பதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுக்கொண்டு வருகிறது.

Agricultural products in Wallajah Panchayat Union Council.

* 491 Q.—THIRU T MARTIN: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) Whether a shortage to the value of about Rs. 7,500 was found out in the stock of agricultural products belonging to the Wallajah Panchayat Union Council in North Arcot in the year 1969; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ரூ 8,144.64 பெறுமானமுள்ள இருப்பு குறைவது கண்டுபிடிக்கப்பட்டது.

(இ) இதற்குப் பொறுப்பானவர்களிடமிருந்து ரூ. 4,406.30 வசூலிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தொடர்பானவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை தனியாக எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தில் இதுபோன்று பணம் குறைவு ஏற்பட்டிருக்கிற நிலைமையையும் விவசாயப் பொருள்கள் காணாமல் போவது அல்லது குறைவுபடுவதற்கான காரணங்களை அறிய சி.ஐ.டி. புலனாய்வுத் துறையினர் மூலம் கண்டுபிடித்து குற்றம் செய்தவர்களைத் தண்டிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1970 மார்ச் 23]

திரு. ஏ. சி. நரசிம்மன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இங்கே கேள்வியிலே இருப்பது வாலாஜா பஞ்சாயத்து யூனியன் பற்றி. கனம் உறுப்பினர் அவர்கள் வாலாஜாபாத் பஞ்சாயத்தைப் பற்றிக் கேட்கிறார்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இலாக்காக்களின் மூலமாகத் திட்டங்களை நிறைவேற்றுகிறோம். அதிலே புகார்கள் கையாடல்கள் போன்றவற்றைப்பற்றி வருமானால் போலீஸ் மூலம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். எல்லா இடங்களுக்கும் போலீஸை அனுப்பிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இலாகாவின் மூலம் விசாரணை செய்யலாம். இதிலே குறைபாடுகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு குறிப்பிட்ட தொகை வசூல் செய்யப்பட்டிருக்கிறது. எஞ்சிய தொகையையும் வசூல் செய்வதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. எல்லா இடங்களுக்கும் போலீஸை வைத்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இது தான் தொன்று தொட்டு இருந்து வருகின்ற முறையாகும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒழுங்கீனங்களுக்காக அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த அதிகாரிகளுக்கு மீண்டும் வேலை கொடுத்திருக்கிறார்களா ? அந்த அதிகாரி இந்த டிபார்ட்மெண்ட் அதிகாரியா ? ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்ததற்குப் பின்னால் அந்த அதிகாரி பணி புரிகிறாரா, எந்த டிபார்ட்மெண்டில் பணி புரிகிறார் என்று அமைச்சர் அவர்கள் பதில் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முறைகேடுகளுக்கு முக்கியப் பொறுப்புள்ளவர் வளர்ச்சி அதிகாரி, எக்ஸ்டன்ஷன் ஆபீஸர் என்று கூறப்படுகிறது. ஆனாலும் வட்டார வளர்ச்சி அதிகாரிமீது வேளாண்மை இலாகா நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒழுங்கீனங்கள் இருக்குமானால், அரசாங்கம் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : கனம் மார்டின் அவர்கள் வாலாஜாபாத் என்று குறிப்பிட்டுக் கேட்டார்கள். அது வாலாஜா பாத்தா அல்லது வாலாஜா பேட்டையா ? வட ஆற்காடு மாவட்டத்திலே வாலாஜாபேட்டை இருக்கிறது, வாலாஜாபாத் செங்கற்பட்டு மாவட்டத்திலே இருக்கிறது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வாலாஜா என்றுதான் கேள்வியில் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கேள்வியில் அப்படித்தான் இருக்கிறது.